பாடம் 4

# சகலமும் புதுமை

**உங்கள் சபையில் சேருவதற்காக அநேகர் ஞானஸ்நானம் எடுப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? அப்போது உங்களுக்கு எப்படியிருந்தது? ஆதிகாலச் சபையில் ஒரே நாளில் ஏராளமான மக்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்.**

சீடர்களால் நம்ப முடியவில்லை. அவர்கள் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது; ஒருநாளில் 3000 புது விசுவாசிகள்ஞானஸ்நானம்பெற்றார்கள்.

அவர்களில்அநேகர்வெளியூர் மக்கள். வெகுதூரம் பயணம் செய்து பெந்தெகொஸ்தே பண்டிகையைக் கொண்டாடுவதற்காக அங்கே வந்திருந்தார்கள்; பண்டிகைமுடிந்துவிட்டது. அவர்கள் ஊருக்குத் திரும்பவேண்டும். ஆனால், அவர்கள் அவசரப்படவில்லை. எருசலேமில் இன்னும் கொஞ்ச நாட்கள் தங்கியிருக்க ஆசைப்பட்டார்கள்; சீடர்களிடமிருந்து, இயேசுவைப்பற்றி இன்னமும் கற்றுக்கொள்ள விரும்பினார்கள்.

எருசலேமிலிருந்த விசுவாசிகள், இந்தப் புது விசுவாசிகளைத் தங்கள் வீடுகளுக்கு அழைத்தார்கள். அவர்கள் ஒன்றாய்ச் சாப்பிட்டார்கள்; ஒன்றாய் ஜெபித்தார்கள்; ஒன்றாய்க் கர்த்தரைப் புகழ்ந்தார்கள்.

விசுவாசிகளில் சிலர் பணக்காரர்கள்; சிலர் ஏழைகள்; சிலர், கிறிஸ்தவர்களாக மாறினதால், வீட்டிலிருந்து துரத்தப்பட்டார்கள். எல்லோரையும் கவனிப்பதற்காக விசுவாசிகளில் சிலர் தங்களுடைய உடைமைகளை விற்றார்கள். தங்களிடமிருந்த பொருட்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொண்டார்கள். உலகப் பொருட்கள் இப்போது



## மனன வசனம்

**மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்.**

**எபேசியர் 6:8.**

அவர்களுக்கு முக்கியமாய்த் தெரியவில்லை. கல்லறையிலிருந்து இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதே முக்கியமாகத் தெரிந்தது. 'அவர் சீக்கிரம் வருவார்;அனைவரையும் பரலோகத்திற்கு அழைத்துச் செல்வார்' என்று நம்பினார்கள். அவர்களுடைய உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது.

பரிசுத்த ஆவியானவர் அவர்களை அன்பால் நிறைத்திருந்தார். எல்லோரிடமும் தம்முடைய நம்பிக்கையை எடுத்துச் செல்ல விரும்பினார்கள். விசுவாசிகள் மூலம் பரிசுத்த ஆவியானவர்அநேகஅற்புதங்களைச் செய்தார்.

இன்றுபோல் அன்று செய்தித்தாள்களோ, வானொலியோ, தொலைக்காட்சியோ கிடையாது; ஆனாலும், இயேசுவைப் பற்றிய செய்தி வேகமாகப் பரவியது. எல்லோரும் அதைப் பற்றிப் பேசினார்கள்.



''இன்று ஆலயத்திற்கு முன்பாக நடந்த காரியம் என்ன என்பது தெரியுமா?''

''என் பக்கத்து வீட்டுக்காரர் உங்களுக்குத் தெரியும் அல்லவா? பிறந்ததுமுதல் அவன் நடக்கமுடியாத சப்பாணியாக இருந்தான். ஆனால், நேற்று என்ன நடந்தது தெரியுமா?''

''நான் பார்த்தது என்ன என்று உனக்குத் தெரியுமா?''

இத்தகையஉரையாடல்தான் எருசலேம் முழுவதும் பேச்சாக இருந்தது.

ஒருவருக்கொருவர் தேவனுடைய வசனத்தை எடுத்துச் சென்றார்கள்;எல்லோரும் ஒன்றாகச் சாப்பிட்டார்கள். ஒவ்வொரு நாளும் புதிய மனிதர்கள் இயேசுவைப்பற்றிக் கேள்விப்

## செய்தி

**நாம் பிறருக்கு உதவிசெய்வதற்தாக, தேவன் நமக்கு வரங்களைத் தருகிறார்.**

பட்டார்கள், ஒவ்வொரு நாளும் அநேகர் சபையில் சேர்ந்தார்கள்.

சகலத்தையும் பொதுவாக வைத்து அவர்கள் ஒருவரையொருவர் நேசித்தார்கள்.

அன்பே! இன்றும் விசுவாசிகள் உலகப் பொருளை முக்கியப்படுத்தாமல் தேவனை முக்கியப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அன்றுபோல் இன்று நாமும் ஒன்றாய் தேவனைத் துதிக்கவேண்டும். அப்பொழுது அன்றுபோல் இன்றும் ஏராளமான மக்கள் தேவனுடைய சபையில் சேர்வார்கள்; தேவன் மகிமைப்படுவார்.

## புதிர் 4

**செய்முறை:**

*கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியானவற்றில், '✓' எனக் குறியிடு. தவறானவற்றில், '✗' எனக் குறியிடு.*

1. அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் இருந்தார்கள். ________
2. கடைகள்தோறும் அப்பம்பிட்டார்கள். ________
3. கபடமில்லாத இருதயத்துடன் சாப்பிட்டார்கள். ________
4. அனுதினமும் தேவாலயத்திலே இருந்தார்கள். ________
5. தேவனைத் துதித்தார்கள். ________
6. ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். ________